# Layout Application - Final Approval Letter

Roc No: VXDQWIUZ/2025/TCP **Date:** 9/1/25 2:45 PM

From:

Village Panchayat

Panchayat office R.t.malai

To :

Mr.SALISH MARTIN S/O INASU,
PLOT NO.4, SHALOM,
SELVA NAGAR EXTN, PONNAGAR,
TIRUCHIRAPPALLI DISTRICT- 620 001.

Online Application Number: VXDQWIUZ

Sir/ Madam,

Sub :

Residential Layout - District Town and Country Planning Office - Roc No – VXDQWIUZ/2025/TCP – Rachandar Thirumalai malai Panchayat & Village, Thogamalai panchayat Union, Kulithalai Taluk, Karur District S.F.No: 711/3C – Extend of 1.00acre (4019.00 Sq.m )– Technical Clearance/ Concurrence / Planning Permission No – SWP/ DTCP / Karur / Layout No: 97/2025 Final order Issued reg .

Ref :

1. Application (Reference No: VXDQWIUZ) received through Single Window Portal From Mr.I.SALISH MARTIN, Dated: 03.02.2025.

2. Road Pattern Plan Approved By the District Town and Country Planning Office, Karur. Dated: 02.04.2025.
3. Letter Roc.No.19799/2020, Dated:24.12.2020 of Director Of Town and Country Planning, Chennai (Circular).
4. Gift Deed Document No: 3451/2025, Dated : 26.05.2025.
5. G.O.No.138, Housing and Urban Development Department , Dated:04.06.2004.
6. G.O.No.79, Housing and Urban Development Department , Dated:04.05.2017.
7. G.O.No.18 , Department of Municipal Administration and Water Supply, Dated: 04.02.2019, G.O.16 Department of Municipal Administration and Water Supply, Dated: 31.01.2020 and G.O.No.181,Housing and Urban Development Department , Dated: 09.12.2020.
8. G.O.No.141, Housing and Urban Development Department , Dated:23.09.2020.
9. G.O.No.141 , Housing and Urban Development Department , Dated:16.07.2022.

10. Government Letter No.19113/4(3)/2017-1, Housing and Urban Development Department, Dated: 30.08.2017.
11. Assistant Director Town and Country Planning Department Karur – Roc No – VXDQWIUZ /2025/TCP, Dated: 03.02.2025
12. Demand raised for payment of Layout Approval Fee and Layout inspection Fee respectively on 22/08/2025 .
13.Payment of Layout Approval Fee and Layout Inspection Fee received from the applicant respectively on .25/08/2025
14. Rachandar Thirumalai malai Village / Panchayat Resolution No.205/2025-2026, Dated:31.07.2025

Body:

the application seeking technical clearance/ concurrence/Planning Permission formation of Residential layout Application (Reference No: VXDQWIUZ /2025/TCP) to an extent of 4019.00 sqm. In the land bearing S.F.No.711/3C of Rachandar Thirumalai malai Panchayat & Village, Thogamalai panchayat Union, Kulithalai Taluk, Karur District Technical clearence/Concurrence/Planning permission (SWP/DTCP/ karur /LAYOUT No.97/2025) Final order issued

SPECIAL CONDITIONS:
1. This office has not legally certified the title to the ownership by granting the technical clearance and planning permission. Only the entitlement to develop the land by the applicant is verified through the documents uploaded in the web portal. Any person wishing to purchase the property must individually ascertain the ownership of the property of the developer/seller. If any dispute arises towards the ownership, the same shall be settled through the appropriate forum. This office is not the appropriate authority to decide on this.
2. As envisaged under the "Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, the promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Projector part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority. The applicant has to comply the said provisions.
3. The fees/charges collected from the applicant are as follows:
Layout Approval Fees : Rs. 1,25,010.00/-
Layout inspection Fees: Rs. 5,000.00./-

**Village**

Signature valid

*Signed by: Village Panchayat President*
*Location:Karur*
*Date:2025.09.01 14:45:05*

கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :திரு.மகண்ணன்.,

ந.க.ஆ1/15975/2024 நாள்: 23.01.2025

பொருள்: நிலம் - பாதை - கரூர் மாவட்டம் - குளித்தலை வட்டம் - இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710/1-ல் களம் சர்கார் புறம்போக்கில் உள்ள பூஸ்துதி பாதையை பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக கிராம புல வரைபடத்தில் விளக்கியாகப் பதிவு செய்திட உத்திரவிடுதல்.

பார்வை:

1. தோகைமலை வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ)(பொ) கடிதம், ந.க.ஆ3/94/2023, நாள்.02.07.2024.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித எண்.ஓ.மு.(ஆ1)/10016/2024, நாள்:05.07.2024.
3. குளித்தலை வட்டாட்சியரின் அறிக்கை, ந.க.அ2/3118/2024, நாள்:05.09.2024
4. குளித்தலை உதவி ஆட்சியர்(முகூபொ)-ன் அறிக்கை, ந.க.அ4/2883/2024, நாள்.26,09,2024.
5. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தணிக்கைக்குறிப்பு, நாள். 16.10.2024.

........

பார்வை 1-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில், தோகைமலை வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்படி இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710 உள்ள குடியிருந்து வரும் குடும்பங்கள் பயன்படுத்திவரும் மண்சாலையினை கிராம புல வரைபடத்தில் விளக்கியாகப் பதிவு செய்திட கோரப்பட்டுள்ளதாக வரப்பெற்ற கடிதத்தின்மீது, விசாரணை மேற்கொண்டு அறிக்கை கோரி பார்வை 2ல் காணும் குளித்தலை உதவி ஆட்சியர்(முகூபொ)-ன் கடிதத்தில் அறிக்கை கோரப்பட்டதை தொடர்ந்து, பார்வை 3ல் காணும் அறிக்கையினை குளித்தலை வட்டாட்சியர் சமர்ப்பித்துள்ளதன்பேரில், குளித்தலை உதவி ஆட்சியர் (முகூபொ) தலப்பார்வை செய்து தனதறிக்கையின்னை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

வருவாய் கணக்குகள் பரிசீலனை:

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இராச்சாண்டார் திருமலை ஊராட்சி மற்றும் கிராமம் சாலையாக கோரும் புல எண்.710, நில உடைமை மேம்பாட்டு திட்ட "அ" பதிவேட்டில் பரப்பு ஹெக் 1.56.0 ஏர்ஸ் சர்க்கார் புறம்போக்கு குறிப்பு கலத்தில் களம் என பதிவாகியுள்ளது. அதன்பின்பு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.ஆ2/15873/2020, நாள்:10.01.2021 ஆணையின்படி பரப்பு ஹெக் 0.03.54 ஏர்ஸ் ரயத்து வாரி மனையாக உட்பிரிவு செய்யப்பட்டு, 20 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

குளித்தலை வட்டாட்சியர் அறிக்கை:

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710/1ல் உள்ள மண்சாலையை அப்பகுதியில் குடியிருந்துவரும் நபர்களுக்கு சாலையாக பயன்படுத்திக்கொள்ள தோகைமலை வட்டார வளர்ச்சி அலுவலரின் கோரிக்கையின்பேரில், மேற்படி கிராம கணக்குகளை ஆய்வு செய்யப்பட்டதில், கிராம 'அ' பதிவேட்டில் களம் என வகைபாடு செய்யப்பட்ட புல எண்.710/1 புலத்தில் பரப்பு ஹெக்.1.5246 ஏர்ஸ் இடமானது கிராம கணக்குகளின்படி களம் என்று உள்ளது எனவும், மேற்படி புல எண்ணில் உள்ள இடத்தில் சுமார் 20 நபர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டு, அவற்றில் வீடுகள் உள்ளது எனவும், மேற்படி நிலத்தில் வீடுகட்டி குடியிருந்து வரும் வீடுகளுக்கு செல்ல தோகைமலை ஒன்றியம் சார்பாக 0.04.5 ஏர்ஸ்சில் 30 அடி அகலம் 64 அடி நீளம் கொண்ட தென்வடல் கான்கிரிட் சாலை பொதுவழி சாலையாக இணைக்கப்பட்டுள்ளது எனவும் சாலை ஆர்.டி மலை ஊராட்சியின் கட்டுபாட்டிலும் பராமரிப்பிலும் இருந்து வருவது தனது தலப்பார்வையில் தெரியவருகிறது.

மேற்படி கிராம கணக்குகளில் ஆர்.டி.மலை ஊராட்சி கீழப்பட்டி பஞ்சாயத்து சர்வே எண்.710/1-ல் உள்ள சாலை பொது மக்களின் பயன்பாட்டிற்கு சாலையாக மாற்றிட ஊராட்சி மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், மேற்படி பாதை அனுமதி கோரும் இடமானது "அ" பதிவேட்டில் களம் என வகைபாடு செய்யப்பட்ட புல எண்.710/1-ன் பரப்பு ஹெக்.1.5246 ஏர்ஸ் நிலமாகும். மேற்படி மண்பாதையை பாதையாக பயன்படுத்த எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதும் விசாரணையில் தெரியவருகிறது.

எனவே, மேற்படி நிலத்தில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஆ2/ 15873/2020, நாள். 10.01.2021-ன்படி நில அளவையர் மூலம் மனைகளாக பிரிக்கப்பட்டு அத்து காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆர்.டி. மலை கிராம புல எண்.710/1-ல் களம் சர்கார் புறம்போக்கில் உள்ள மண்பாதையை பாதையாக பயன்படுத்திட ஏதுவாக கிராம புல வரைபடத்தில் விளக்கியாக பதிவு செய்யலாம் என குளித்தலை வட்டாட்சியர் பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

பூஸ்திதி தன்மை:

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710 பரப்பு ஹெக் 1.56.0 ஏர்ஸ் சர்க்கார் புறம்போக்கு குறிப்பு கலத்தில் களம் என பதிவாகியுள்ளதில், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ஆ2/15873/2020, நாள்:10.01.2021 ஆணையின்படி பரப்பு ஹெக் 0.03.54 ஏர்ஸ் ரயத்து வாரி மனையாக உட்பிரிவு செய்யப்பட்டு 8 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு அதில் அவர்கள் வீடுகட்டி வசித்து வருகின்றனர். மேற்படி [பலத்தில் 30 அடி அகலம் 64 அடி நீளம் கொண்ட கான்கிரீட் சாலை உள்ளது. அதனை தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், கால்நடைகள் செல்லவும், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களை இணைக்கவும், கட்டிடம், மனைபிரிவுகள் மற்றும் அரசு பொதுப்பணித்துறையின் வளர்ச்சி பணிகள் போன்ற அபிவிருத்திக்காக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி வீடுகளுக்கு செல்ல அருகில் உள்ள மண்பாதையினை சாலையாகப் பயன்படுத்திக்கொண்டுவருகின்றனர்

<u>உதவி ஆட்சியர்(முகூபொ)ன் அறிக்கை</u>

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710 பரப்பு ஹெக் 1.56.0 ஏர்ஸ் சர்க்கார் புறம்போக்கு குறிப்பு கலத்தில் களம் என பதிவாகியுள்ளதில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.ஆ2/15873/2021, நாள்:10.01.2021 ஆணையின்படி பரப்பு ஹெக் 0.03.54 ஏர்ஸ் ரயத்து வாரி மனையாக உட்பிரிவு செய்யப்பட்டு 8 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு அதில் அவர்கள் வீடுகட்டி வசித்து வருகின்றனர். மேற்படி புலத்தில் 30 அடி அகலம் 64 அடி நீளம் கொண்ட கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதனை தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், கால்நடைகள் செல்லவும், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களை இணைக்கவும், கட்டிடம், மனைபிரிவுகள் மற்றும் அரசு பொதுப்பணித்துறையின் வளர்ச்சி பணிகள் போன்ற அபிவிருத்திக்காக பயன்பட்டிற்கு கொண்டுவர இராச்சாண்டார் திருமலை ஊராட்சி மன்ற தீர்மான எண்:741/2023-ன்படி தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்நிலையில், குளித்தலை வட்டம், இராச்சாண்டார் திருமலை கிராமம் தற்போது கிராம புல எண்:710/1 பரப்பு ஹெக் 1.52.46 ஏர்ஸ் நிலத்தில் தோகைமலை ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்டுள்ள 30 அடி அகலம் 64 அடி நீளம் கொண்ட கான்கிரீட் சாலையின் அருகில் உள்ள மண்சாலையை இராச்சாண்டார் திருமலை ஊராட்சி மன்ற தீர்மான எண்:741/2023-ன்படி பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், கால்நடைகள் செல்லவும், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களை இணைக்கவும், கட்டிடம், மனைபிரிவுகள் மற்றும் அரசு பொதுப்பணித்துறையின் வளர்ச்சி பணிகள் போன்ற அபிவிருத்திக்காக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி வீடுகளுக்கு செல்ல அருகில் உள்ள மண்பாதையினை சாலையாகப் பயன்படுத்திக் கொண்டுவருகின்றனர் என்றும், மேற்படி மண்பாதையினை கிராம புல வரைபடத்தில் விளக்கியாக பதிவு செய்யலாம் என உதவி ஆட்சியர்(முகூபொ) பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

<u>மாவட்ட வருவாய் அலுவலரின் புலத்தணிக்கை குறிப்பு</u>

பிரஸ்தாப புலத்தினை கரூர் மாவட்ட வருவாய் அலுவலரால் 25.10.2024 அன்று தலத்தணிக்கை செய்யப்பட்டு, மேற்படி புலத்தணிக்கை குறிப்பில், கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710 பரப்பு ஹெக் 1.56.0 ஏர்ஸ் சர்க்கார் புறம்போக்கு குறிப்பு கலத்தில் களம் என பதிவாகியுள்ள நிலத்தில் தோகைமலை ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்டுள்ள 30 அடி அகலம் 64 அடி நீளம் கொண்ட கான்கிரீட் சாலையின் அருகில் உள்ள மண்சாலையினை சாலையாக இராச்சாண்டார் திருமலை ஊராட்சி மன்ற தீர்மான எண்:741/2023-ன்படி பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், கால்நடைகள் செல்லவும், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களை இணைக்கவும், கட்டிடம், மனைபிரிவுகள் மற்றும் அரசு பொதுப்பணித்துறையின் வளர்ச்சி

பணிகள் போன்ற அபிவிருத்திக்காகவும் பொது பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொண்டுவருகின்றனர் என்றும், மேற்படி மண்பாதையினை கிராம புல வரைபடத்தில் விளக்கியாக பதிவு செய்யலாம் என்பது தெரியவருகிறது.

எனவே, குளித்தலை வட்டாட்சியர் மற்றும் குளித்தலை உதவி ஆட்சியர் (முகூபொ) ஆகியோரின் பரிந்துரை மற்றும் கரூர் மாவட்ட வருவாய் அலுவலரின் புலத்தணிக்கையின் அடிப்படையிலும், மேற்படி இராச்சாண்டார் திருமலை கிராமம் புல எண்.710 பரப்பு ஹெக் 1.56.0 ஏர்ஸ் சர்க்கார் புறம்போக்கு குறிப்பு கலத்தில் களம் என பதிவாகியுள்ள நிலத்தில் தோகைமலை ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்டுள்ள 30 அடி அகலம் 64 அடி நீளம் கொண்ட கான்கிரீட் சாலை மற்றும் அதன் அருகில் உள்ள மண்சாலையினை சாலையாக பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக மேற்படி மண்பாதையினை கிராம புல வரைபடத்தில் விளக்கியாக பதிவு செய்திட கரூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மற்றும் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் அவர்களுக்கு இதன்மூலம் ஆணையிடப்படுகிறது..

ஒம்/- ம.கண்ணன்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.

// உண்மை நகல் உத்தரவுபடி //

அ. ய[signature] 28/01/25

மாவட்ட வருவாய் அலுவருக்காக

பெறுநர்,

1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் மற்றும் உதவி இயக்குநர்,
நில அளவைப் பதிவேடுகள் துறை,
கரூர்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்,(கி.ஊ)
தோகைமலை

23/01/25

நகல்

1. உதவி ஆட்சியர், குளித்தலை
2. வருவாய் வட்டாட்சியர், குளித்தலை
3. ஆ1- இருக்கை இருப்புக்கோப்பிற்கு.

நக. எண்: ஆ1/ 109 / 2023
நாள்:26 ..02.2025.

ஊராட்சி ஒன்றியம்
தோகைமலை

<u>சான்று</u>

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகைமலை ஊராட்சி ஒன்றியம், ஆர்.டி.மலை ஊராட்சி, கீழப்பட்டியில் புல எண் 710–ல் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சிமெண்ட் சாலையானது ஊராட்சிக்கு சொந்தமான சாலையாகும். இந்த சாலையானது 7 மீட்டர் அகலமும் 50 மீட்டர் நீளமும் கொண்டதாகவும், பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என இதன் மூலம் சான்று அளிக்கப்படுகிறது.

26.02

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், தோகைமலை

26.2.25

பெறுநர்:

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

\\manager\E\b3\2023\109-2023 Single Plot approval letter.docx

அனுப்புநர் :
திருமதி.பொன்னம்மாள் பாலமூர்த்தி
தலைவர்,
இராச்சாண்டார் திருமலை ஊராட்சி,
தோகைமலை ஊராட்சி ஒன்றியம்,
குளித்தலை தாலுக்கா,
கரூர் மாவட்டம் - 621 313.
Cell: 99444 58711, 97901 38581

பெறுநர் :

தேதி 30.12.2024

சான்று

கரூர் மாவட்டம், தோகைமலை ஊராட்சி ஒன்றியம் R.T.மலை ஊராட்சி கிழப்பட்டியான் புல எண் 710-ல் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சிமெண்ட் சாலையானது ஊராட்சிக்கு சொந்தமான சாலையாகும். இந்த சாலையானது 7 மீட்டர் அகலமும் 50 மீட்டர் நீளமும் கொண்டதாகவும் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தலைவர்
ஊராட்சி மன்றம்
இராச்சாண்டார் திருமலை